முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1112

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.10.2022, சனிக்கிழமை

1. அறமெனும் சூட்சும ராஜனே
அன்னதான சக்தி மிகு அரங்கனே
வரம் தந்து சுப்ரமணியர் யானும் இனிதே
வழங்குவேன் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 28 ம் நாள் 15.10.2022, சனிக்கிழமை)
2. ஆசிதனை அரங்கன் பலம் பெருகி
அகிலமெல்லாம் தர்மஞான ஆட்சி
வாசிவென்ற ஞானியர் படைகளாக
வையகத்தில் மக்களெல்லாம் நிரம்பி
3. நிரம்பியே இந்த கலியுகம்
நிலமதனில் அரங்கனால் ஞானயுகமாக
வரம்பல கூடி சிறக்க வழங்குவேன்
அரங்கனுக்கு சக்தியாக
4. ஆகவே அரங்கனுள் யானிருந்து
அனுதினம் அற்புதம் நிகழ்த்தி வர
வரம்தேடி கலியுக மக்களெல்லாம்
வணங்கி அரங்கன் குடில் நோக்கி
5. நோக்கியே வந்து சரணாகதி
நிலவுலகில் கொண்டு ஞானம் பெற
ஞானம் பெற உலகோர் அனைவருமே
ஞானிகளாக மாற்றம் கலியினில் கண்டு
6. தானாக இந்த உலகினிலே
தவபலம் தர்மபலம் கூடிய ஞான ஆட்சிக்காலம் மாற்றம் பெறும்
நன்மை கருதி அரங்கனே ஆறுமுகன் யான்
நாட்டிடுவேன் உலகில் அவதாரம் நிகழ்த்தி
7. நிகழ்த்தியே சேவையாற்றி வர
நிலவுலகில் அரங்கன் சூட்சுமத்தை நிகழ்த்திடுவேன்
கண்டு தேறி வருபவரெல்லாம் ஜெகமதனில் ஞானிகளாக சிறக்கக்கூடும்
சிறந்த ஞான ஆட்சியை உலகிற்கு தரக்கூடும்
8. கூடவே அற்புதத்தை அரங்கன் வழி
குறையின்றி ஆறுமுகன் நடத்தி வருகின்றேன்
நாடி வர ஓங்காரக்குடில் தொடர்பு
ஞாலமதில் உலகிற்கே மாற்றமாக நிகழக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–